**2023 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு நகர் மன்றக் கூட்டத்தில் நடைபெறும் அவசரக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்.**

**முன்னிலை : திருமதி. ஆர். ஜானகி.**

**பொருள் எண்.1**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள குத்தகை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுடன் கூடிய அறிக்கை 31.03.2024 உடன் முடிவடைய உள்ளது.

1) 01.04.2024 முதல் 31.03.2027 வரை புதிய பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் பழைய கட்டண விகிதங்களை உயர்த்தி, புதிய கட்டண விகிதங்கள் வசூல் செய்ய அரசாணை எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி4)துறை, நாள் 19.09.2008ன் படியும் நகர்மன்ற தீர்மானம் எண்.806 நாள் 25.01.2022 நகராட்சியில் (K.N.M.T) கலைஞர் நகர்புற மேம்பாட்டு வளர்ச்சி திட்டத்தின் மூலம் தினசரி மார்க்கெட் புதிதாக கட்டுமான பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டுக்கு வரும் நிலையில் உள்ளது. எனவே தினசரி மார்க்கெட் தினசரி கட்டணம் வசூல் உரிமம் கீழ்க்கண்டவாறு புதிய கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது இதனை நகர்மன்றம் பார்வைக்கும் முடிவிற்கும் தினசரி கட்டணம் நிர்ணயம் செய்ய மன்றத்தில் வைக்கப்படுகிறது

| வ.எண். | கடைகளின் அளவு | கடைகளின் எண்ணிக்கை | ஒரு கடையின் மாத வாடகை | ஒரு கடையின் ஒரு நாள் வாடகை |
|---|---|---|---|---|
| 1. | 2.40 X 4.00 m | 31 | 4800/- | 160/- |
| 2. | 2.40 X 2.40 m | 131 | 3000/- | 100/- |

மேற்கண்ட அட்டவணையின் படி ஒரு மாதத்திற்கு ஒரு நாள் வாடகை பொறியியல் பிரிவில் நிர்ணயம் செய்து வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வசூல் செய்ய வேண்டிய கட்டண விபரம் | பழைய தினசரி கட்டணம் | புதிய தோராய தினசரி கட்டணம் |
|---|---|---|---|
| 1. | காலியிடத்தில் கடை வைத்து வியாபாரம் செய்ய | 15.00 | 50.00 |
| 2. | விற்பனைக்கு கொண்டு வரும் கோழி தலைச்சுமை மற்றும் சைக்கிள் சுமை 1 கூடைக்கு | 10.00 | 30.00 |
| 3. | பாரமேற்றி வரும் கைவண்டி ஒற்றை மாட்டு வண்டி ஒரு தடவைக்கு | 25.00 | 75.00 |
| 4. | பாரமேற்றி வரும் இரட்டை மாட்டு வண்டி ஒரு தடவைக்கு | 25.00 | 75.00 |
| 5. | முழு பாரமேற்றி வரும் லாரி ஒரு தடவைக்கு | 100.00 | 200.00 |
| 6. | பாதியும் அதற்கு குறைவான பாரம் ஏற்றி வரும் லாரி ஒரு தடவைக்கு | 75.00 | 150.00 |
| 7. | விற்பனைக்கு கொண்டு வரும் நெய் 1 க்கு அல்லது அதற்கு குறைவான அளவுக்கும் | 5.00 | 20.00 |
| 8. | இதர இனங்களுக்கு வாரச் சந்தையில் உள்ள பட்டியல்படி வசூலிக்கவும், பாரமேற்றி வரும் மினிடோர் ஒரு தடவைக்கு | 50.00 | 100.00 |

2) அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி4) நாள் 03.07 .2007ன் படி (மூன்றாண்டு குத்தகை இனங்கள்) நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகங்களில் காலியாக உள்ள கடைகளும் மற்றும் இறைச்சி கடைகள்(ஆட்டு இறைச்சி, கோழி இறைச்சி, மாட்டு இறைச்சி மற்றும் மீன் கடை) உரிமையினங்களும் 31.03.2024உடன் முடிவடைய உள்ளதால் 01.04.2024 முதல் 31.03.2027 வரை மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி நிபந்தனைகளுடன் கூடிய அறிக்கை மற்றும் புதிய கட்டண விகிதங்களுடன் கீழ்க்கண்டுள்ள 2024-2025 முதல் 2026-2027 ஆம் ஆண்டிற்கான குத்தகை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனை அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. நகராட்சிக்கு சொந்தமான பகுதியில் உள்ள மேற்கண்ட உரிமை இனங்கள் 31.03.2024 உரிமம் காலம் முடிவடைதால் அரசாணை எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை, நாள்: 19.09.2008 ன் படியும் (ஓராண்டு குத்தகை இனங்கள்) மற்றும் அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை, நாள்: 03.07.2007 ன் படி (மூன்றாண்டு குத்தகை இனங்கள்) நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகங்களில் காலியாக உள்ள கடைகள் மற்றும் இறைச்சி கடைகள் உரிமையினங்களும்) மேற்கண்ட இனங்களுக்கு ஏற்கனவே ஏலம் விடப்பட்டு ஏலம் செல்லாத கடைகளும்சேர்த்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரவும் அதன்படிஏற்கனவே பொது ஏலம் நிபந்தனைகள் 2021-2022 முதல் 2023-2024 உள்ள நிபந்தனைகளுடன் 2024 – 2025 முதல் 2026 – 2027 ஏல நிபந்தனைப்படியும் மாவட்ட அரசிதழில் வெளியிட மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட இனங்கள் அனைத்தும் பொதுமக்கள் அறியும் வண்ணம் ஆட்டோ விளம்பரம் பொது ஏலம் நிபந்தனைகள் அடங்கிய சுமார் 24 பக்கங்கள் கொண்ட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி அறிக்கையினை அச்சிட்டு இலவசமாக வழங்கிடவும், மாவட்ட அரசு இதழ் விளம்பரம் செய்யவும் மற்றும் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இதற்காக தோராய செலவு 1,00,000/- (ஒரு இலட்சம்) பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1200/2020/அ3)

## பொருள் எண்: 2

இந்நகராட்சிக்கு சொந்தமான அத்தாணி ரோட்டில் அமைந்துள்ள வாரச்சந்தை அரசாணை எண் 39. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 24.09.2023 இன் படி மேம்பாடு பணிகள் மேற்கொள்ள திட்ட நிதி ரூபாய் 303.00இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே நகராட்சி

பொறியாளர் அவர்களின் குறிப்பு கோப்பு ந.க.எண் 886/ 2023/ இ1 நாள் : 12.10.2023 இல் கடிதம் வழங்கப்பட்டதின் பேரில் வாரச்சந்தை கட்டுமான பணிகள் தொடங்க உள்ளதால் ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்டு நடைபெற்று வரும் குத்தகை இனமான வாரச்சந்தை இயங்கும் வளாகம் காலி செய்து 01.11.2023 சம்பந்தப்பட்ட பொறியர் பிரிவுக்கு கட்டுமான பணிக்கு ஒப்படைக்க வேண்டிய உள்ளதால், தற்காலிகமாக வாரச்சந்தை நடத்திக் கொள்ளும் அளவிற்கு இடம் இருந்தால் நகர அமைப்பு அலுவலரை குறிப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்படி வாரச்சந்தை நடத்திக் கொள்ளும் அளவிற்கு சுமார் 1.39 ஏக்கர் பரப்பளவு இந்நகராட்சிக்கு சொந்தமான இடம் இல்லை என்ற விவரம் நகரமைப்பு பிரிவின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதால் வருகின்ற 01.11.2023 முதல் அரசாணை (நிலை) எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19.09.2008 கீழ் நடைபெற்று வரும் வாரச்சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் இனத்தை நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

நகராட்சிக்கு சொந்தமான அத்தாணி ரோட்டில் அமைந்துள்ள வாரச்சந்தையினை புதியதாக கட்டுமான பணிகள் துவங்க அரசாணை எண்.39, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 24/09/2023 ன் படி திட்ட நிதி ரூ.303.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே, புதிய கட்டுமான பணிகள் தொடங்க உள்ளதால் மேற்படி தற்போது நடைபெற்று வரும் இடத்தில் உள்ள வாரச்சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் இனத்தை மட்டும் நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1200/2020/அ3)

இடம்: சத்தியமங்கலம்

நாள் : 30.10.2023

**(ஒப்பம்) ஆர்.ஜானகி**
**நகர்மன்றத் தலைவர்**
**சத்தியமங்கலம் நகராட்சி**

**//உண்மை நகல்//**

**ஆணையாளர்**
**சத்தியமங்கலம் நகராட்சி**